


புதுக்கோட்டை மாவட்டம்/மாநகராட்சி, அடப்பன்குளம், 7வதுவார்டுக்குட்பட்ட சின்ன அடப்பன் குளம் தெரு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு பெய்த கனமழையின் காரணமாக மழைநீர் தேங்கியுள்ள இடங்களை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, 22.10.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரிவைகைகுண்டாறு) திருமதி.ஆர்.ரம்யாதேவி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், அரிசிப்பாளையம், கே.கே.வி.கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் 22.10.2025 அன்று நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



திருவெறும்பூர் அருகே உள்ள கிருஷ்ணசமுத்திரம் முதல் நிலை ஊராட்சியில் குமரேசபுரம், கிருஷ்ண சமுத்திரம், எழில் நகர், கணேசபுரம், திருவேங்கடநகர், தொண்டமான்பட்டி ஆகிய பகுதிகளை கொண்ட கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சியில் சுமார் 20,000க்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். மேலும் இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சியில் நகர் பகுதியில் உள்ள பெல் ஓய்வு பெற்றோர் சங்க அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு முகாமில் அனைத்து துறைகளையும் ஆய்வு செய்து பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் குறித்தும் அதற்கு தீர்வு காண்பது குறித்தும் கேட்டறிந்தார்.

### எடப்பாடி பழனிச்சாமி எதை அரசியல் ஆக்கினாலும் அதைப் பற்றி தி.மு.க.விற்கு கவலை கிடையாது!

# மக்களும் அதைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி புதுக்கோட்டையில் பேட்டி!

*புதுக்கோட்டை, அக்.24-*

புதுக்கோட்டை மாநகரில் தொடர்ந்து பெய்த கனமழை காரணமாக அடப்பன்குளம் நிரம்பி உரினி வெளியேற்றப்பட்டு வருகிறது. அதை குடியிருப்பு பகுதிகளில் புகுந்து பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது பாதிப்புக்கு உள்ளான பகுதியை அமைச்சர் எஸ்.ரகுபதி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ உள்ளிட்டோர் பார்வையிட்டு ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

இதன் பின்னர் அடப்பன்குளம் நிரம்பியுள்ளதையும் உபரி நீர் வெளியேற்றப்படுவதையும் அமைச்சர் எஸ்.ரகுபதி பார்வையிட்டடு ஆய்வு செய்தார்

இதன்பின்னர் செய்தியாளரிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி,



எடப்பாடி பழனிச்சாமிக்கு குற்றம் சுமத்துவது பழக்கம் தான். அதுபோல் தான் நெல்மணிகள் குறித்து குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார். விவசாயி களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்மணிகள் பாதுகாப்பாகத்தான் தார்ப்பாய்கள் அமைத்து மூடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. எந்த பாதிப்பு ஏற்பட்டாலும் அதற்கு அரசு முழு பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று உணவுத்துறை அமைச்சர் கூறியுள்ளார். அதனால் விவசாயி களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

எடப்பாடி பழனிச்சாமி எதை அரசியல் ஆக்கினாலும் அதைப்பற்றி எங்களுக்கு கவலை கிடையாது. மக்களும் அதைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள். அவர் அனைத்தையுமே அரசியல் தான் செய்வார் என்பது நாட்டுக்கும் தமிழ்நாடு மக்களுக்கும் நன்றாக தெரியும்.

தேர்தலுக்கு களத்திற்கு வருகின்றவர்கள் பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை கிடையாது. எப்போதும் மக்கள் பணியில் பெரு மழை பெய்கின்ற பொழுது களத்தில் முதலில் நிற்பவர்கள் தி.மு.க.வினர் தான். கடந்த நான்காண்டுகளாக அதை பார்த்து வருகிறார்கள். இரவு பகல் பாராமல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் துணை முதலமைச்சர் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

வடகிழக்கு பருவமழை எதிர்நோக்கி தான் நாங்கள் காத்திருக்கின்றோம். வடகிழக்கு பருவமழை நல்ல முறையில் பெய்ய வேண்டும். விட்டுவிட்டு மழை பெய்ய வேண்டும் அப்போதுதான் தண்ணீர் தேங்கி போதுமான அளவிற்கு இருக்கும். இல்லையென்றால் தண்ணீர் முழுவதும் கடலுக்கு சென்று விடும். கடலுக்கு போகாமல் மக்கள் பாதிக்காத வண்ணம் வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு நல்ல முறையில் பெய்யவேண்டும் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இருக்கின்றோம்.

நாங்கள் தூர்வாரும் முறையை முறையாகத்தான் செய்துள்ளோம். புதுக்கோட்டை அடப்பன் குளம் அ.தி.மு.க. ஆட்சியில் 5 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரப்பட்டதாக சொல்கின்றனர். அதற்கு ஏதாவது அடையாளம் இருக்கிறதா? தற்போது.

அதற்கான அடையாளமே இல்லை. இப்படி அடையாளமே இல்லாமல் தூர் வாருபவர்கள் நாங்கள் அல்ல உண்மையாக தூர் வாருபவர்கள் நாங்கள்.

தி.மு.க. சார்பில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மீட்பு பணி ஆகியவற்றை எப்படி மேற்கொள்வது என்பது குறித்து தான் துணை முதலமைச்சர் தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து வகையிலும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. எப்போதுமே மத்திய அரசு நிவாரணம் வழங்குவது வழக்கம் கிடையாது. மத்திய அரசு நிவாரணம் இல்லாமல் எங்களால் முடிந்த அளவு நிச்சயமாக எந்த வகையில் சமாளிக்க முடியுமோ அந்த வகையில் சமாளிப்போம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

### சேலம் மாநகராட்சி அரிசிப்பாளையத்தில்

# சூரமங்கலம் மண்டலத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

*சேலம், அக். 24 -*

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் அரிசிப்பாளையம் கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (22.10.2025) நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி சேலம் மாநகராட்சி ஆராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின் திட்டம் 15.07. 2005 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா,ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 18 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 256 முகாம்களும் என மொத்தம் 43 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.072025 முதல் 17:102005 வரை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 225826 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இது தவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோர விண்ணப்பமாக மொத்தம் 13184 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (22.10. 2025) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் வார்டு 27 க்குட்பட்ட பகுதிகளுக்கு அரிசிப்பாளையம் KKV கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்திலும் தரசிங்கபுரம் நகராட்சி வார்டு 2 0 க்குட்பட்ட பகுதிகளுக்கு ஆத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், மல்லூர் பேரூராட்சி 4 , 15 க்குட்பட்ட பகுதிகளுக்கு மல்லூர் அகரமஹால் திருமண மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி தவபட்டி பகுதிக்கு காவேரி கிராஸ் சமுதாய கூடத்திலும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் நடுவனேரி பகுதிக்கு நடுவனேரி பி.எஸ். சண்முகம் சுந்தராம்பாள் திருமண மண்டபத்திலும் ஓமலூர் ஊராட்சி ஒன்றியம். எஸ்.செட்டிபட்டி பகுதிக்கு சரக்கப்பிள்ளையூர் சுபம் திருமண மண்டபத்திலும் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் நேற்று முன்தினம் (22.10.2025) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலம் அரிசிப்பாளையம் KKV கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் பொது மக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு சொத்து வரி பெயர் மாற்றம், புதிய சொத்து வரி காலியிட நிலவரி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்திகழ்வின் போது சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், சூரமங்கலம் உதவி ஆணையர் ரகுராஜ் சேலம் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், அரிசிப்பாளையம், K.K.V கந்தசாமி செட்டியார் ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (22.10.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# 19 'அ' வது வட்டத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## புழல் எம். நாராயணன் முன்னிலையில் தேவேந்திரன், கா.தாமரைச்செல்வன் பணிகளை துரிதப்படுத்தினர்!

*மாதவரம், அக். 24 -*

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வட்டத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைபடியும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து மண்டல அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் பார்வையிட்டு பணிகளை துரிதப்ப டுத்தினார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வட்டம் மாத்தூர் எம்.எம்.டி.ஏ. பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பருவ மழையை தொடர்ந்து பொதுமக்கள் பாதிப்பு ஏற்பட்டு தங்கினால், அவர்களுக்கு உணவு செய்யும் கூடம் சென்னை மாநகராட்சி சார்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்காக பிரத்யேகமாக சமையலறை தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சமையலறை மற்றும் பள்ளி அறைகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், 19 ஆவது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச் செல்வன், மாமன்றஉறுப்பினர் க.காசிநாதன் ஆகியோர் முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 மணலி மண்டல அலுவலர் தேவேந்திரன் அவர்கள் மேற்பார்வையில் பார்வையிட்டு பணிகளைதுரிதப்படுத்தி னார்கள்.

பொதுமக்கள் மழைக் காலங்களில் வந்து தங்கினால் அவர்களுக்கு வழங்குவதற்காக பாய், போர்வை, தலையணை ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தனர்.

மேலும் மாற்றுத்திறனாளிகள் மழையால் பாதிக்கப்பட்டு வருகை தந்தால் அவர்கள் சாய்தளத்தில் தங்குவதற்கு அறைகள் கொடுப்பதும், பாலூட்டும் தாய்மார்கள் இருந்தால் அவர்களுக்கு பால் ஊட்டுவதற்கு என்று தனி அறை ஏற்படுத்துவது குறித்தும் மண்டல அலுவலர் தேவேந்திரன் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். கழிவறைகள் சுத்தமா னதாகவும் சுகாதார முறைகளும் இருப்பதற்காக தயார் நிலையில் உள்ளது.


### நாமக்கல் மாவட்டம்

# சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி மறைவு!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி.- பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ.- ஆட்சியர் துர்காமூர்த்தி மலரஞ்சலி!

*நாமக்கல், அக். 24-*

நாமக்கல் கிழக்கு மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு நாமக்கல் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று வியாழக்கிழமை (23.10.2025) காலை 7.30 மணி அளவில் சிகிச்சை பலனின்றி காலமானார். கொல்லிமலை வாழவந்தி நாடு எல்லை கிராய்பட்டி பகுதியில் வசித்து வருகிறார். மலைவாழ் பழங்குடியினர் பிரிவை சேர்ந்த இவருக்கு ஜெயமணி என்ற மனைவியும், மாதேஸ்வரன் என்ற மகனும், பூமலர் என்ற மகளும் உள்ளனர்.



**அரசியல் அனுபவம்:**

தொடக்கத்தில் தி.மு.க.வில் இருந்த இவர், பிறகு அ.தி.மு.க.வில் சேர்ந்தார். கடந்த 2003-ல் மீண்டும் தி.மு.க.வில் சேர்ந்து, 2006ல் சேந்தமங்கலம் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2007 ஆம் ஆண்டு முதல் நாமக்கல் மாவட்ட கழக மாவட்டக் கழக துணைச் செயலாளராக உள்ளார்.

2011 ஆம் ஆண்டு சேந்தமங்கலம் தொகுதியில் போட்டியிட்டு அதிமுக கூட்டணி தேமுதிக வேட்பாளர் சாந்தியிடம், அதைத் தொடர்ந்து 2016 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக வேட்பாளர் சந்திரசேகரனிடம் தோல்வியுற்றார்.

இதனை தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இதே தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக துணை செயலாளர் கே பொன்னுசாமி உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராம லிங்கம், மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி, நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, நாமக்கல் கிழக்கு நகர செயலாளர் மாநகராட்சி துணை மேயருமான பூபதி, மேற்கு நகர செயலாளர் சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி நூர்ஜகான் பேகம்

### அக்டோபர் 24 (2018)



கழகத்தின் கொள்கை முழக்கக் குரலாக - தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்பரணி பாடும் பெண் சிங்கமாகத் திகழ்ந்த இவர், திருச்சி மாவட்டம் கரூரில் பிறந்து, 1972ல் கழகத்தின் தொண்டராக இணைந்து, தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, கழகத்தின் லட்சியங்களையும் செயல் திட்டங்களையும் பிரச்சாரம் செய்து வந்தவர்.

திண்டுக்கல் நகர 10வது வட்டக் கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, மாவட்டம் முதல் மாநிலம் வரை மகளிர் அணியில் தலைவர், செயலாளர், புரவலர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திண்டுக்கல்லில் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியினைச் சீரிய முறையில் ஆற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று, சிறைச் சாலைகளுக்குச் சென்றவர். தலைவர் கலைஞர் அவர்கள், மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு "நீதிகேட்டு நெடும் பயணம்" சென்றபோது, எட்டு நாட்களும் தொடர்ந்து தலைவர் அவர்களுடன் நடந்து சென்றவர். தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் "கலைஞர் விருதினை" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**